**MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED BLACK GRANITE QUARRY OF M/S TAMIL NADU MINERALS LIMITED AT S.F.NO.83 (PART) OVER AN EXTENT OF 6.59.5 HA IN JAMMANAHALLI VILLAGE, PAPPIREDDIPATTI TALUK, DHARMAPURI DISTRICT ON 20.11.2025 AT 11.00 A.M., IN M/s. GOVT. COMMUNITY HALL, THENKARAIKOTTAI VILLAGE, PAPPIREDDIPATTI TALUK, DHARMAPURI DISTRICT.**

**PRESIDING OFFICERS:**

| | | |
|---|---|---|
| 1. Tmt.R.Kavitha | : | District Revenue Officer,<br>Dharmapuri. |
| 2. Thiru.K.Udayakumar | : | District Environmental Engineer,<br>TamilNadu Pollution Control Board,<br>Dharmapuri. |

List of Project representatives and public participated is enclosed

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Dharmapuri**

At the outset, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Dharmapuri welcomed the District Revenue Officer, Dharmapuri, the Project Proponents, the Consultant and the Public who have attended the Public Hearing conducted for obtaining Environmental Clearance for the above said proposed project of the unit of M/s. Tamil Nadu Minerals Limited at S.F.No.83 (Part) over an extent of 6.59.5 Ha, Jammanahalli Village, Pappireddipatti Taluk, Dharmapuri District.

The unit has submitted its application before State Level Environmental Impact Assessment Authority (SEIAA) and obtained Terms of Reference (ToR). It was instructed to conduct Public Hearing and submit the proceedings of the same.

Based on the above, public notice has been published in Daily Newspaper “Dinathanthi” (Tamil) and “The New Indian Express” (English) on 07.10.2025. The Executive Summary and Draft EIA report of the above said projects are kept in the Government Offices premises for public reference and Pamphlets were issued to the public regarding the Public Hearing.

Presentation will be given by the Project Proponent after that the public are requested to furnish their views / remarks regarding this project, by mentioning their name and village. The public can also furnish their views as written representation. The recorded video along with written representations will be submitted to the Board and further submitted to State Level Environmental Impact Assessment Authority for further necessary action. The Consultant is requested to explain the project.

**Technical Presentation by the Project Proponent Thiru.E.Ganesan, Deputy Manager, Tamil Nadu Minerals Limited**

The Project Proponent has made a Technical Power Point Presentation briefing the project of M/s. Tamil Nadu Minerals Limited at S.F.No.83 (Part) over an extent of 6.59.5 Ha, Jammanahalli Village, Pappireddipatti Taluk, Dharmapuri District.

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Dharmapuri**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Dharmapuri has requested the public to furnish their views / remarks regarding this project by mentioning their name and their village.

**1.Thiru.G.Madhavan, Alamarathupatti**

I am doing agriculture there. The people living in that area are all Vanniyar families. Around the site, people having own 1 or 2 acres of land and are engaged in Agricultural activities. You may carry out the work as long as it does not cause any kind of disturbance there. There is no place for cattle and calves to graze. Since the Government has announced this project, we are saying that we will cooperate. There are cattle and houses nearby. Please carry out the blasting work carefully so that stones do not fall and cause damage.

Our village, Alamarathupatti, should receive at least one percent of the funds coming from this project, and assistance should be provided to the people and the village as needed. Please work patiently and ensure that stones do not reach our area. We are not saying no to a project undertaken by the Government, but it should be carried out without causing any harm to the people.

**2. Thiru.Jeganathan, Headmaster (Retired), Jammanahalli**

New projects are coming to the village. It is the duty of every citizen to welcome good projects that are beneficial to the people. What we must give utmost importance to in this project is the safety of the public and the safety of the livestock. If the project is implemented with these priorities in mind, it will be beneficial to everyone. This is my opinion. Thank you.

**3. Thiru.Thambidurai, Jammanapatti**

This is the Jammanapatti Panchayat Quarry, but the meeting has been held here, which is inconvenient. The meeting should have been held in our panchayat. We are the ones who should respond here. Why are people from here giving answers? Holding the meeting here is wrong, sir. There is enough space in our village; it should have been held there. No one in our village was informed about this meeting until now. I came only after someone called me. How will the people know? How will they understand what is good or bad for them?

I am responsible for Adi Dravidar Street in Jammanapatti village. I came here only after receiving a phone call. How will the people give their opinions before the work begins? Secondly, blasting is going to take place, and we live right next to the site. We need safety in Adi Dravidar Street. Vehicles passes only through our village. There is no speed breaker. Vehicles come and go, causing air pollution.

You are saying that employment opportunities will be provided to people in our village. Has even one person from our village been given a job in this quarry? The quarry is located close to Adi Dravidar Street in Jammanapatti, so we are the ones who are affected.

We must be given employment and priority. This quarry has not provided any employment opportunities or welfare schemes. How is this quarry being established here? Please stop the quarry. We do not want the quarry. Our groundwater level is decreasing. We have no job opportunities—please provide employment. Secondly, our people take goats and cattle for grazing. The areas where they go to graze belong to people of other communities, not ours. This is causing conflicts. There are 10 acres of poramboke grazing land nearby. Who is using it? Other people are using it, not us. The Adi Dravidars of Jammanahalli have not benefited in any way.

Since there are 450 Adi Dravidar households, we request that employment be provided to us. Consult the people, gather their opinions, and decide whether this project is good or bad before starting the quarry. On behalf of our village, we request that this quarry not be operated.

**4.Thiru.M.Sivaraj, Ex-Panchayat President, Jammanahalli Panchayat**

I extend my greetings to the District Revenue Officer of Dharmapuri, the Deputy Manager of Tamil Nadu Minerals Limited, Thasildar Papireddipatti Taluk and the Inspector, Gobinathampatti Police Station who provided security for this public hearing, as well as to the local government officials and the members of the public from this and other panchayats who have participated in this public hearing.

For a country to develop, industries are important. Can everyone go into government jobs? Agriculture, driving, and other occupations are all forms of employment. Therefore, as the officials mentioned, these technical jobs are necessary. When hiring people for quarry work, I request that as many people as possible from Jammanahalli Panchayat be employed.

My request is as follows a Panchayat President. I submitted an application to the District Collector stating that our village has no funds and requested that funds be allocated from this quarry. A lady from the Department of Geology assured that funds would be provided. Since 2017, this has been on hold. When the work begins, 30% of the District Mineral Fund (DMF) will be provided. Later, I went to Chennai and met Mr. Ganesh at the Minerals Office. I spent two years working on this same matter.

Secondly, street lights are needed and should be installed. Jammanahalli is the only village in Tamil Nadu without cemetery road. I submitted petitions regarding the above to the District Collector and the Minister, but no action has been taken. Ultimately, it seems that we, the village residents, will have to do it ourselves.

The District Revenue Officer should take note of this. In our village, a primary school is needed in the area where Adi Dravidars live. The Chief Education Officer has not given permission for the school. I approached the Thasildar, and he told me to meet the Chief Education Officer. I met the Primary Education Officer and submitted a letter, but even after a month, there has been no response. What can we do? Therefore, please provide Tower electric lights for Kottaiyur and Thenkarai Kottai, and a proper cemetery road for Jammanahalli.

This project has been a long-standing dream. When my father worked in 1976 and 1986, he was employed at 1.50 paisa per day. At that time, the work was done by the Mineral Company; no private parties were involved. After nearly nine years, work is finally starting again—this is a very happy. Even though the Panchayat is Jammanahalli, all benefits should also reach the surrounding villages. I request that the Mineral Company, along with the Environment and District Administration, ensure that such arrangements are properly provided to the people. Thank you.

**5. Thiru. Aarumugam, Jammanahalli**

I kindly request that make proper arrangements for cemetery road in our village.

**6. Thiru. Arivazhagan, Jammanahalli**

I extend my respectful greetings to all government officials, police officers, and members of the public present here. The establishment of this Mineral Company is to be welcomed. As mentioned by the official, technology has advanced today. Please ensure that operations are carried out using equipment in such a way that there is no impact on the surrounding people. No harm should come to the residents.

All social communities are present in our Panchayat. We have been struggling for a proper cemetery road for many years. As the Ex-President mentioned, a pathway must be provided. When quarry work is carried out, local residents should be given priority. Employment should be given first to locals. According to the rules, extraction should be done only within 12 cubic meters.

If the quarrying operation exceeds the permitted limits, we will stop it using whatever means we can. The majority of the funds should be provided. Thiru. Sakthivel, two years ago recommended for Rs.2.25 lakh for the primary school. Using these funds, we improved the school, including providing toilet facilities and other school development works. Our village primary school has been ranked first among schools in Dharmapuri District. I am a member of the School Management Committee and the Parent-Teacher Association. Through the leadership of the President, we have provided everything necessary for the school. Two days ago, the Tamil Nadu Minerals Corporation advertised through vehicles across the entire village regarding a public opinion meeting.

When doing this advertising, it's not possible to do it individual for anyone, yet it was done. In any project, there will be shortfalls as well as positive aspects don't look only at the shortfalls, look at the positive aspects too. There will be profit as well as loss, and we have to proceed accordingly. My request is that you implement this project in a way that does not cause any harm to the people.

**7. Thiru. Ayubkhan, Thenkarai Kottai**

I have two or three points to make. Priority should be given first to those who will be most affected. Employment opportunities should be provided in the quarry. Due to the check post in Pudupatti, all vehicles are passing through this route. Traffic congestion occurs in Jammanahalli, Sugarmill, and Ramiyampatti.

None of the cameras here are functioning properly. The cameras on the road do not work. We do not know when an accident might occur. The police only come and catch incidents using CCTV cameras after the fact. Therefore, there are no functional cameras in this area. If cameras are installed here, any unforeseen incidents can be monitored properly.

**8. Thiru.Prabhakaran, Jammanahalli**

Good morning to the officials and members of the public present at this public hearing. Sir, in our village, there is a small tank called Kosuvan Kudtai, covering 2–3 acres. This tank has been in my grandfather's and grandmother's land for generations.

Currently, that area has been encroached upon, and there is no proper method for water conservation. As a result, water is flowing away and being wasted into the stream. I humbly request that the encroachment in this area to be removed and that a proper tank to be constructed there, especially since our area is drought-prone.

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Dharmapuri**

On behalf of the Tamil Nadu Pollution Control Board, I would like to express my gratitude to all those who have come to the public hearing meeting.

Additionally, the attendance register of participants in the public hearing, a short clip of audio and video recordings (Pendrive), petitions received and photographs are attached herewith.

| | |
|---|---|
| **District Environmental Engineer,** | **District Revenue Officer** |
| **TamilNadu Pollution Control Board,** | **Dharmapuri** |
| **Dharmapuri** | 7/7 |

**தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், ஜம்மனஅள்ளி கிராமத்தில் புல எண் : 83 (பகுதி)-ல் 6.59.5 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள தி/எ். தமிழ்நாடு கனிம நிறுவனம் லிமிடெட் கருப்பு கிரானைட் குவாரிக்கு 20.11.2025 அன்று முற்பகல் 11.00 மணியளவில் தி/எ். அரசு சமுதாய கூடம், தென்கரைகோட்டை கிராமம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விவரங்கள் :**

முன்னிலை :

| | | |
|---|---|---|
| திருமதி. ஆர்.கவிதா | : | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>தருமபுரி. |
| திரு. கு.உதயகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>தருமபுரி. |

கலந்து கொண்ட திட்ட பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தருமபுரி.

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், ஜம்மனஅள்ளி கிராமத்தில் புல எண் : 83 (பகுதி)-யில் 6.59.5 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள தி/எ்.தமிழ்நாடு கனிம நிறுவனம் லிமிடெட்டின் உத்தேசிக்கப்பட்ட கருப்பு கிரானைட் குவாரியின் சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கான பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள மாவட்ட வருவாய் அலுவலர், தருமபுரி அவர்களையும், நிறுவனத்தின் மேலாளர் மற்றும் திட்ட ஆலோசகர் அவர்களையும், இக்கருத்துக் கேட்புக்கு வருகை புரிந்துள்ள பொதுமக்கள் மற்றும் அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பாக வரவேற்றார்.

மேற்கண்ட நிறுவனத்தின் உத்தேசிக்கப்பட்ட கருப்பு கிரானைட் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்காக மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் விண்ணப்பித்ததன் அடிப்படையில், Terms of reference (ToR) –ஐ வழங்கி, பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை நடத்தி, கூட்ட நடவடிக்கையை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் மேற்கண்ட உத்தேசிக்கப்பட்ட கருப்பு கிரானைட் குவாரி கருத்து கேட்பு கூட்டம் நடைபெறுவது தொடர்பாக 07.10.2025 தேதியிட்ட தமிழ் நாளிதழ் தினத்தந்தி மற்றும் ஆங்கில நாளிதழ் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டது. அதனை தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் மற்றும் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறவிருக்கும் கிராமத்தின் தொடர்புடைய அரசு அலுவலகங்களுக்கு நிறுவனத்தின் EIA report மற்றும் executive summary ஆகியவை அனுப்பி வைக்கப்பட்டு பொது மக்கள் காட்சிக்கு வைக்கப்பட்டது. மேலும் துண்டு பிரசுரங்கள் வாயிலாக பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் குறித்து பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இவ்வரவேற்புரையினை தொடர்ந்து நிறுவனத்தை சார்ந்த அதிகாரிகள் நிறுவனத்தின் திட்டச் சுருக்கத்தினை விளக்கி கூறுவார்கள். அவ்விளக்கத்தினை தொடர்ந்து பொதுமக்கள் ஒவ்வொருவராக தங்களது பெயர் மற்றும் ஊரின் பெயரை குறிப்பிட்டு இத்திட்டம் குறித்த தங்களது கருத்துக்களை தெரிவிக்க கேட்டுக் கொண்டார்.

பொது மக்கள் அவர்களது கருத்துக்களை எழுத்து மூலம் மனுவாகவும் கொடுக்கலாம் என தெரிவித்தார். அவ்வாறு பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களும், கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் அனைத்தும் ஒலி மற்றும் ஒளி

வடிவில் பதிவு செய்யப்பட்டு, பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட மனுக்கள் இணைக்கப்பட்டு வாரிய தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார். மேலும், அதனை மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சத்திற்கு அனுப்பி சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்து முடிவு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். தற்பொழுது நிறுவனத்தின் திட்ட ஆலோசகர் இத்திட்டத்தை பற்றி விளக்கவுரை ஆற்ற கேட்டுக் கொண்டார்.

**தொழில் நுட்ப விளக்கம் – முனைவர்.ஈ.கணேசன், துணை மேலாளர், தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவனம் லிமிடெட், சென்னை**

திட்ட ஆலோசகர் தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவனம் லிமிடெட் நிறுவனத்தின் முன்மொழியப்பட்டுள்ள கருப்பு கிரானைட் குவாரியின் விரிவாக்கம் தொடர்பான விளக்கவுரையை எடுத்து உரைத்தார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தருமபுரி**

பொது மக்கள் தங்களின் பெயர் மற்றும் ஊரினை தெரிவித்துவிட்டு இத்திட்டம் பற்றி தங்களது கருத்துக்களை சுருக்கமாக தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

**1. திரு.G. மாதவன், ஆலமரத்துப்பட்டி**

நான் அங்குதான் விவசாயம் செய்து கொண்டிருக்கிறேன். அங்கு இருக்கிறவர்கள் எல்லாம் வன்னியர் குடும்பம் தான். சுற்றியும் 1 ஏக்கர், 2 ஏக்கர் நிலம் வைத்து கொண்டு விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கு எந்த வித பாதிப்பும் இல்லாம நீங்கள் வேலை செய்து கொள்ளலாம். மாடு, கன்று மேய்க்கிறத்துக்கு இடம் இல்லை. அரசு அறிவித்த பிறகு இதுக்கு ஒத்துழைப்பு கொடுக்கறோம்னு சொல்கிறோம். மாடுகள் மற்றும் வீடுகள் இருக்கிறது. அதற்கு சேதாரம் இல்லாமல் பொறுப்பா வெடி வைத்து கற்கள் வராமல் வேலை செய்து கொள்ளுங்கள். எங்க ஊரு ஆலமரத்துப்பட்டி கிராமத்துக்கு இதுல வருகின்ற ஒரு சதவீதம் நிதியை சுற்றி இருக்கிற ஆலமரத்துப்பட்டி கிராமத்து மக்களுக்கும்,

ஊருக்கும் தேவையான உதவியை செய்து கொடுங்கள். கற்கள் வராத அளவிற்கு பொறுமையாக பணியை செய்து கொள்ளலாம். அரசு செய்ய கூடிய வேலையை நாம் வேண்டாம் என சொல்லுவதில்லை இருந்தாலும் மக்களுக்கு எந்தவித பாதிப்பு இல்லாமல் செய்து கொள்ளலாம் என தெரிவித்து கொள்கிறேன்.

2.திரு.ஜெகநாதன், தலைமையாசிரியர் (பணி நிறைவு), ஜம்மனஅள்ளி

ஊருக்கு புதிய திட்டங்கள் வருகின்றது. மக்கள் பயன்பாட்டிற்கான நல்ல திட்டங்களை வரவேற்பது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். இந்த திட்டத்தில் முழுமையாக நாம் பார்க்க வேண்டியது பொதுமக்களின் பாதுகாப்பு, கால்நடைகளின் பாதுகாப்பு இதற்கு முக்கியத்துவம் கொடுத்து இத்திட்டத்தினை செயல்படுத்தினால் அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும் இது என்னுடைய கருத்து நன்றி வணக்கம்.

3.திரு.தம்பிதுரை, ஜம்மனப்பட்டி

இது ஜம்மனப்பட்டி பஞ்சாயத்து கல்குவாரி, இங்க கூட்டம் போட்டிருக்கிறது கஷ்டமா இருக்கிறது. எங்க பஞ்சாயத்துல தான் இந்த கூட்டம் போடனும். நாங்க தான் இங்க பதில் சொல்லனும். இங்க இருக்கிறவங்க ஏன் பதில் சொல்லுறீங்க. இங்க கூட்டம் போட்டது தப்பு சார். எங்க ஊரில் அவ்வளவு இடம் இருக்கு அங்க தான போடனும். இந்த கூட்டம் பற்றி எங்க ஊரில் இதுவரை யாரும் சொல்லவே இல்லை. இப்ப ஒருத்தர் போன் போட்டு சொன்ன பிறகு தான் நான் வருகிறேன். எப்படி மக்களுக்கு தெரியும்? எப்படி மக்களுக்கு நல்லது கெட்டது செய்வாங்க? எங்க ஊரு ஜம்மனப்பட்டி ஆதிதிராவிடர் தெருவில் நான் தான் ஊர் பொறுப்புல இருக்கேன். இப்ப போன் போட்டு சொல்லி தான் நான் வந்திருக்கேன். எப்படி மக்கள் கருத்தை சொல்லுவாங்க வேலை செய்வதற்கு. இரண்டாவது வெடி வைக்கிறாங்க, வெடி வைச்சா நாங்க பக்கத்தில் இருக்கிறோம். ஆதிதிராவிடர் தெருவில் எங்களுக்கு பாதுகாப்பு வேணும். எங்க ஊர் வழியாக தான் போகிறார்கள். ஒரு வேகத்தடை இல்லை. வண்டி வருகிறது போகிறது இதனால் காற்று மாசு ஏற்படுகிறது. இதுல

வந்து எங்க ஊரில் இருக்கிறவங்களுக்கு வேலை வாய்ப்பு சொல்லுறீங்க. எங்கள் ஊரில் இருந்து ஒருத்தருக்காவது இந்த கல்குவாரியில் வேலை வாய்ப்பு கொடுத்திருக்காங்களா? ஜம்மனப்பட்டி ஆதிதிராவிடர் தெருவில் குவாரி எங்க பக்கம் இருக்கிறது இதனால் நாங்க தான் பாதிப்பு அடைகிறோம். எங்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கனும், எங்களுக்கு முன்னுரிமை தரணும். இந்த கல்குவாரியால் வேலைவாய்ப்பு, ஒரு நலத்திட்டங்கள் ஏதும் இல்லை. எப்படி இந்த கல்குவாரி இங்க உருவாக்குறீங்க. தயவுசெய்து கல்குவாரி நிறுத்துங்கள். கல்குவாரி வேண்டாம். எங்களுக்கு நிலத்தடிநீர் மட்டம் குறையுது. எங்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை வேலைவாய்ப்பு கொடுங்க. இரண்டாவது எங்கள் மக்கள் ஆடு, மாடு மேய்க்க போறாங்க. ஆடு, மாடு மேய்க்க போற பக்கம் இருக்கிறவங்க வேறு வகுப்பு சார்ந்தவர்கள். எங்கள் வகுப்பை சார்ந்தவர்கள் அல்ல. இதனால் சண்டை வருது. அக்கம் பக்கம் மேய்ச்சல் தரை புறம்போக்கு நிலம் 10 ஏக்கர் இருக்கிறது. அதை யார் பயன்படுத்துறாங்க. வேற நபர்கள் தான் பயன்படுத்துறாங்க. எங்க ஜம்மனஅள்ளி ஆதிதிராவிடர்களுக்கு எதுவும் பயன்படவில்லை. இதனை கருத்தில் கொண்டு ஆதிதிராவிடர்கள் 450 வீடுகள் இருப்பதினால் எங்களுக்கு வேலைவாய்ப்பு கொடுங்கள். மக்கள் கிட்ட கருத்து கணிப்பு கேட்டு இது நல்லதா கெட்டதா என விசாரித்து விட்டு வந்து இந்த கல்குவாரி நடத்துங்கள். கல்குவாரி நடத்த எங்க ஊர் சார்பாக நாங்கள் கோரிக்கை வைக்கிறோம்.

4.திரு.மா.சிவராஜ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், ஜம்மனஅள்ளி ஊராட்சி

இந்த கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கின்ற தருமபுரி மாவட்டத்தினுடைய வருவாய் அலுவலர் அவர்களுக்கும் மற்றும் தமிழ்நாடு கனிம நிறுவன துணை மேலாளர் அவர்களுக்கும் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் அவர்களுக்கும் இந்த கருத்து கேட்பு கூட்டத்திற்கு பாதுகாப்பு அளித்துள்ள கோபிநாதம்பட்டி காவல்துறை ஆய்வாளர் அவர்களுக்கும் வருகை புரிந்துள்ள உள்ளாட்சித்துறை மற்றும் இந்த ஊராட்சியில் இருந்தும் மற்ற ஊராட்சியில் இருந்து கலந்து கொண்டுள்ள பொதுமக்களுக்கும் எனது காலை வணக்கத்தை தெரிவித்து

கொள்கிறேன். ஒரு நாடு வளர்ச்சி அடைய வேண்டுமென்றால் தொழில்வளம் முக்கியம், வேலைவாய்ப்புனா எல்லோரும் அரசு வேலைக்கு போக முடியுமா? விவசாயம், டிரைவிங் எல்லாமே வேலை தான் அதனால் இப்ப இருக்கிற தொழில்நுட்பங்கள் சார் சொன்னாரு. குவாரி வேலைக்கு ஆட்கள் எடுக்கும் போது முடிந்த வரை ஜம்மனஅள்ளி ஊராட்சியை சேர்ந்தவர்களை எடுங்கனு நான் கோரிக்கை வைக்கிறேன். என்னோட கோரிக்கை என்னவென்றால் நான் தலைவராக வந்த உடனே முதன்முதலில் கொடுத்த விண்ணப்பம் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் எங்க ஊருக்கு நிதி இல்லை. அந்த குவாரியில் இருந்து நிதி கொடுக்க வேண்டும் என கேட்டோம். புவியியல் துறையிலிருந்து ஒரு மேடம் வந்து உங்களுக்கு கண்டிப்பா நிதி கிடைக்கும் 2017-ல் இருந்து நிறுத்தி விட்டோம். வேலை ஆரம்பிக்கும் போது 30% DMF கிடைக்கும். அதுக்கு பின்னாடி நான் சென்னைக்கு போனேன். அங்க கனிம அலுவலகத்தில் கணேசன் சார் பார்த்தேன். இதே வேலையாக இரண்டு வருடங்கள் சென்றேன். இரண்டாவதாக வந்து மின்விளக்கு வேண்டும் அதை அமைத்து கொடுங்க. தமிழ்நாட்டிலேயே மயானப்பாதை இல்லாத ஊர் ஜம்மனஅள்ளி மட்டும் தான். மயானப்பாதை சம்மந்தமாக மாவட்ட ஆட்சியர், அமைச்சரிடம் மனு கொடுத்தேன் எந்த நடவடிக்கையும் இல்லை. கடைசியில் ஊர் பொதுமக்கள் நாங்களே செய்யலாம்னு இருக்கோம்.

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் இதை கவனத்தில் கொள்ள வேண்டும். எங்க ஊரில் ஆதிதிராவிடர் உள்ள பகுதியில் தொடக்கப்பள்ளி வேண்டும். தொடக்கப்பள்ளிக்கு முதன்மை கல்வி அலுவலர் அனுமதி கொடுக்கவில்லை. வட்டாட்சியரை பார்த்தேன். அவர் வந்து முதன்மை கல்வி அலுவலரை பாருங்க சொன்னார். முதன்மை கல்வி அலுவலரை பார்த்து கடிதம் கொடுத்தேன். ஒரு மாதம் ஆகியும் எந்த பதிலும் இல்லை என்ன செய்ய முடியும். அதனால கொட்டாயூர் மற்றும் தென்கரை கோட்டைக்கு உயர்மின் கோபுர விளக்கு, ஜம்மனஅள்ளிக்கு மயான பாதை அமைத்து கொடுங்கள்.

இந்த திட்டம் நடக்குறது நீண்ட நாள் கனவு. எங்க அப்பா 1976, 1986-ல் வேலை செய்யும் போது 1.50 பைசா கூலிக்கு அங்க வேலை செய்தார்கள். அப்போது கனிம நிறுவனம் தான் வேலையை செய்தார்கள், தனியார் யாரும் செய்யவில்லை. ஏறக்குறைய 9 வருடம் கழித்து வேலை செய்யுறீங்க ஆரம்பிக்கிறது சந்தோசம். ஊராட்சி ஜம்மனஅள்ளியாக இருந்தாலும் அதை சுற்றியுள்ள குக்கிராமங்களுக்கும் அனைத்து உதவிகளும் சென்றடைய வேண்டும். இப்படி பட்ட ஏற்பாட்டை கனிம நிறுவனம், சுற்றுச்சூழல் மற்றும் மாவட்ட நிர்வாகம் மக்களுக்கு செய்து கொடுக்க வேண்டும் என கூறி விடை பெறுகிறேன் நன்றி வணக்கம்.

5. திரு.ஆறுமுகம், ஜம்மனஅள்ளி

தயவு கூர்ந்து எங்க ஊருக்கு மயானப்பாதை அமைத்து தர வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

6. திரு.அறிவழகன், ஜம்மனஅள்ளி

இங்கு வந்திருக்கிற அனைத்து அரசு துறை அலுவலர்களுக்கும், காவல்துறை அலுவலர்களுக்கும், பொதுமக்களுக்கும் என் முதற்கண் வணக்கத்தை தெரிவித்து கொள்கிறேன். இந்த கனிம நிறுவனம் வருவது வரவேற்க தக்க கூடிய விஷயம் தான். அய்யா சொன்ன மாதிரி இன்றைக்கு தொழில்நுட்பம் எங்கேயோ போய்விட்டது. சுற்றுப்புற மக்களுக்கு எந்த பாதிப்பும் வராத மாதிரி அவர் சொன்ன மாதிரி உபகரணங்கள் பயன்படுத்தி நடத்தி கொள்ளுங்கள். மக்களுக்கு எந்த பாதிப்பும் வர கூடாது. ஊராட்சியில் அனைத்து சமூக மக்களும் இருக்கிறோம். மயானப்பாதை இல்லைங்க நாங்களும் ரொம்ப வருடமாக போராடுறோம். முன்னாள் தலைவர் சொன்ன மாதிரி மயானப்பாதை வழி செய்து கொடுக்க வேண்டும். குவாரி பணி செய்தால் உள்ளூர் நபர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். வேலைவாய்ப்பில் முதல் முன்னுரிமை கொடுக்க வேண்டும். விதிகள் படி 12 கன மீட்டருக்குள் தான் வெட்டி எடுக்க வேண்டும்.

அதை தாண்டி எடுத்தால் எங்களால் முடிந்ததை கொண்டு நிறுத்தி விடுவோம். பெரும்பான்மையான நிதி கொடுக்க வேண்டும். ஏற்கனவே சக்திவேல் அய்யா இரண்டு வருடங்களுக்கு முன்பு துவக்கப்பள்ளிக்கு 2.25 இலட்சம் நிதி வாங்கி கொடுத்தார். அதன் மூலமாக பள்ளிக்கு கழிப்பறை வசதி, பள்ளிக்கூட மேம்பாட்டுக்கு செய்து கொடுத்தோம். தருமபுரி மாவட்டத்திலேயே சிறந்த பள்ளியாக எங்க ஊரு துவக்கப்பள்ளி தான் முதல் இடம் தேர்வாகியுள்ளது. நான் பள்ளி கூடத்தில் பள்ளி மேலாண்மை குழு மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தில் இருக்கிறேன். தலைவர் மூலமாக பள்ளிக்கு தேவையானது எல்லாம் செய்து கொடுத்திருக்கிறோம். தமிழ்நாடு கனிம நிறுவனம் பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடத்துவது தொடர்பாக இரண்டு நாட்களுக்கு முன்பு வாகனத்தின் மூலம் ஊர் முழுவதும் விளம்பரம் செய்தார்கள். இந்த விளம்பரம் செய்யும் போது தனிப்பட்ட முறையில் யாருக்கும் செய்ய முடியாது, ஆனால் செய்தார்கள். திட்டத்தில் குறையும் இருக்கும் நிறையும் இருக்கும் குறை மட்டும் பார்க்க கூடாது நிறையையும் பாருங்க. இதனால் லாபமும் இருக்கும் நஷ்டமும் இருக்கும் அனுசரித்து தான் போக வேண்டும். இந்த திட்டத்தால் மக்களுக்கு எந்த பாதிப்பும் வராம செய்து கொடுங்க இது என்னுடைய கோரிக்கை.

7. திரு.அயூப்கான், தென்கரைகோட்டை

இங்க என்னுடைய கருத்து இரண்டு, மூன்று கருத்துக்கள் உள்ளது. இங்க யாருக்கு அதிகமாக பாதிப்பு வருதோ அவர்களுக்கு முதல் முன்னுரிமை கொடுக்க வேண்டும். குவாரியில் வேலை போட்டு கொடுக்க வேண்டும். புதுப்பட்டியில் சுங்கசாவடி போட்டதினால் எல்லாம் வண்டியும் இந்த வழியா வருது. ஜம்மனஅள்ளி, சுகர்மில், இராமியம்பட்டி எல்லாம் வழியும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இங்கு எந்த கேமிராவும் சரியில்லை, ரோடுல இருக்கிற கேமிரா எதுவும் சரியில்லை. எந்த நேரத்துல எந்த விபத்தும் நடக்கும். போலீஸ் வந்து சிசிடிவி கேமிரா வைத்து தான் பிடிக்கிறார்கள். அதனால் இந்த பக்கம் எங்கேயும் கேமிரா இல்லை. இங்க கேமிரா வைத்தால் ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் பார்க்க சரியாக இருக்கும்.

8. திரு.பிரபாகரன், ஜம்மனஅள்ளி

கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்துள்ள அதிகாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் காலை வணக்கம். அய்யா எங்கள் ஊரில் 2, 3 ஏக்கர் அளவில் கொசுவன்குட்டை என்ற ஒரு குட்டை இருக்கு. இது என்னுடைய தாத்தா, பாட்டி தலகட்டுல இருந்து இருக்கிறது அய்யா. இப்போது அந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்து அந்த இடத்துல நீர் தேக்கத்துக்கு உண்டான ஒரு வழிமுறையே இல்லை. இப்போது தண்ணீர் போய்ட்டு இருக்கிறது அய்யா நிறைய தண்ணீர் போய் ஆற்றில் கலந்து வீணாகிறது. எங்க ஏரியா வறட்சியான பகுதி அந்த ஆக்கிரமிப்பு பகுதியை அகற்றி எங்களுக்கு அந்த இடத்தில் ஒரு குட்டை அமைத்து தரும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தருமபுரி

பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை மனுவாகவும் கொடுத்தால் ஏற்று கொள்ளப்படும். இக்கருத்து கேட்பு கூட்டத்திற்கு வந்திருக்கின்ற பொதுமக்கள் அனைவருக்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக மிக்க நன்றியினை தெரிவித்து கொண்டார்.

மேலும் பொதுமக்கள் கருத்து கேட்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகைப் பதிவேடு, ஒலி மற்றும் ஒளிப்பதிவுகளின் குறும்பதிவி (Pendrive), பெறப்பட்ட மனு மற்றும் புகைப்படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

cc 23 ... 2/1/24

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
தருமபுரி

மாவட்ட வருவாய் அலுவலர்
தருமபுரி

6/7